ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1533/16 - 2008 ජනවාරි 25 වැනි සිකුරාදා - 2008.01.25
*1533/16 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 4/81 (iv).*

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

23அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23அ என்னும் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், மேற்படி பிரிவின்கீழ் உரிமமொன்றைத் தேவைப்படுத்துகின்றவையும் தீப்பை விளைவிக்கும் வகையில் சூழலினுள் கழிவை வெளியேற்றுதல், கொட்டுதல் அல்லது வெளியாக்குதல் என்பவற்றை ஈடுபடுத்தும் அல்லது அதனை விளைவிக்கும் செயற்பாடுகளாயிருப்பவையுமான செயற்பாடுகளாக இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை இக்கட்டளையால் தீர்மானிக்கின்றேன்.*

பாட்டாலி சம்பிக்க ரணவக்க,
சூழல் மற்றும் இயற்கை வளங்கள்
அமைச்சர்.

கொழும்பு,
*2008, சனவரி 14.*

**அட்டவணை**

விதித்துரைக்கப்பட்ட எந்தச் செயற்பாடுகளுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் ஒன்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தச் செயற்பாடுகள்

**பாகம் அ**

1. இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், முறையாக்கல் பொதியிடல் செய்யும் கைத்தொழிற்சாலைகள்
2. ஒரு நாளைக்கு 1000 கிலோ கிராமிற்கு மேற்பட்ட உற்பத்தி ஆற்றல் கொண்ட சவர்க்காரம் அழுக்கு அகற்றிகள் அல்லது வேறு ஏதேனும் சுத்திகரிப்பு பொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள்;
3. நூற்றியைம்பது மெற்றிக்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த கொள்ளளவுடைய மொத்த பெற்றோலிய திரவ அல்லது திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு களஞ்சியப்படுத்தும் அல்லது நிரப்பும் வசதிகள்;
4. பத்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களை வேலைக்கமர்த்தியுள்ள கண்ணாடியிழையை மூலப்பொருளாகப் பயன்படுத்துவதில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் ;

**அட்டவணை (தொடச்சி)**

5. நாளொன்றுக்கு 100 கிலோகிராம்களுக்கு அல்லது அதற்கு குறைவான மணியிழை புகையூட்டிய இறப்பர் படைதட்டுகளைத் தயாரிக்கும் கைத்தொழில்கள் தவிர்ந்த செயற்கை இறப்பர், இயற்கை இறப்பர் தயாரித்தல் பதனிடுதல் அல்லது இறப்பர் அடிப்படையிலான கைத்தொழில்கள் ;

6. தனியொரு உற்பத்தி முறையினுள் ஒரு தொகுதிக்கு ஒன்று அல்லது அதற்கு அதிகமான மெற்றிக் தொன் மொத்த உள்ளீட்டு கொள்ளளவை விஞ்சுகின்ற செயலூட்டிய காபன் கறுப்பு காபன் தயாரித்தல் அல்லது தென்னஞ்சிரட்டைகளை எரித்தற் கைத்தொழில்கள் ;

7. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆயுர்வேத மற்றும் சுதேச மருந்துவகைகளை தயாரித்தல் அல்லது பிரித்தெடுத்தல் அல்லது முறைப்படுத்தல் சம்பந்தமான கைத்தொழில்கள்;

8. இரசாயன உரம் தயாரித்தல், முறைப்படுத்தல், பதனிடல் அல்லது மீள்பொதியிடற் கைத்தொழில்கள் ;

9. பீடைக்கொல்லிகள், பூச்சிகொல்லிகள், பூஞ்சன கொல்லிகள், பூண்டுக்கொல்லிகள் என்பன தயாரித்தல், முறைப்படுத்தல் அல்லது மீள்பொதியிடுதற் கைத்தொழில்கள் ;

10. எண்ணெய் (கனிப்பொருள் எண்ணெய் அல்லது பெற்றோலியம்) சுத்திகரிப்பு நிலையங்கள் ;

11. சாயம் மற்றும் சாயம் இடைநிலை தயாரித்தல் மற்றும் முறைப்படுத்தும் கைத்தொழில்கள் ;‘

12. தீந்தைகள் (குழம்பு அல்லது எனாமல்) மைகள், நிறப்பொருட்கள், வாணிசு மற்றும் துலக்கி தயாரித்தல் அல்லது முறைப்படுத்தற் கைத்தொழில்கள் ;

13. பெற்றோலிய இரசாயனப் பொருள் (அடிப்படை அல்லது இடைநிலைகள்) தயாரித்தல் அல்லது முறைப்படுத்தற் கைத்தொழல்கள் ;

14. வாயு தயாரிக்கும் அல்லது பதனிடல் அல்லது மீள் நிரப்பும் கைத்தொழில்கள் ;

15. நிலக்கீல் பதனிடும் பொறித்தொகுதிகள் ;

16. பல்லினச்சேர்மங்கள் அல்லது பல்லினச்சேர்மங்களை அடிப்படையாகக் கொண்ட பொருட்களைத் தயாரித்தல் (அதாவது பொலிஎதைலீன் பொலிவினைல், குளோரைட் (பிவீசீ) பொலியுரத்தின் பொலிபுரொலின், பொலியெஸ்ரர் நைலோன் பொலிஸ்ரரின், மரப்பிசின் கண்ணாடியிழை அல்லது வேறு மனித உற்பத்தி இழைகள்) உற்பத்தி சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் அல்லது பல்லினச் சேர்மங்களை அல்லது பல்லினச் சேர்மங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களை மீள் உருவாக்கம் செய்யும் கைத்தொழில்கள் ;

17. சகலவகை டயர்கள், டியூப்கள் தயாரித்தல் அல்லது டயர் தேய்வுகளை புதுப்பிக்கும் கைத்தொழில்கள்;

18. மின்கலம் தயாரித்தல் அல்லது புதுப்பித்தல் கைத்தொழில்கள் ;

19. அஸ்பெஸ்ரசு இழையங்களை மூலப்பொருளாகப் பாவித்தலுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் ;

20. இடைநிலைகள் உட்பட மருந்தாக்கங்களை அல்லது ஒப்பனைப் பொருட்களைத் தயாரித்தல் அல்லது பிரித்தெடுத்தல் அல்லது முறைப்படுத்தல் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் ;

21. இயற்கைப் பசைகள் புறநீங்கலாக ஒட்டுப்பிசின்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் ;

22. தீக்குச்சிகள் தயாரித்தற் கைத்தொழில்களும் வெடிப்பொருள் உற்பத்தி மற்றும் முறைப்படுத்துதல் கைத்தொழில்களும் ;

23. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள பத்திக் கைத்தொழில்கள்;

24. புடவை முறைப்படுத்தல் (உதா : வெளிறச் செய்தல், சாயமிடுதல் அத்துடன் அச்சிடுதல்) கைத்தொழில்கள் அல்லது தைத்த ஆடை கழுவும் கைத்தொழில்கள், மணல் ஊதைப் பீற்றுக் கைத்தொழில் அல்லது 10 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வர்த்தக சலவைத் தொழிற்சாலைகள் ;

25. தோல் பதனிடும் கைத்தொழில்கள் ;

26. கழிவுப் பொருள் தோற்றுவிக்கும் தொழிற்பாடுடைய தோல் மெருகூட்டும் கைத்தொழில்கள் ;

27. சணல் பதனிடும் கைத்தொழில்கள் ;

28. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைக் கொண்ட இயற்கை நாரை வெளிறச் செய்தல் அல்லது சாயமூட்டலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் அல்லது இயற்கை நாரை மூலமாகக் கொண்ட கைத்தொழில்கள் ;

29. இருபத்தைந்து அல்லது அதற்கு அதிகமான எந்திரங்களை கொண்ட மின்தறிகள் அல்லது பின்னல் அல்லது சித்திரத் தையல் தொழிற்சாலைகள் மொறுமொறுப்பூட்டும் நடவடிக்கைகளுடன் கூடிய மின்தறிகள் ;

30. சீனி உற்பத்தித் தொழிற்சாலைகள் அல்லது சீனி சுத்திகரிப்பு நிலையங்கள் ;

31. நொதிப்புக் கைத்தொழில்கள் (வடிசாலைகள் வடிப்பாலைகள்) அல்லது மதுசாரம் சேர்ந்த பானங்களை போத்தலில் அடைக்கும் பொறித்தொகுதிகள் அல்லது போத்தல் கழுவும் தொழிற்பாடுகளையுடைய போத்தலில் அடைக்கும் பொறித்தொகுதிகள் ;

32. இருபத்தைந்து அல்லது அதற்கு அதிகமான வேலையாட்களை வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வெதுப்பக உற்பத்திகள் பிஸ்கட்கள், இனிப்புகள் தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

33. விலங்கறுமனைகள் ;

34. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள் அல்லது கறுவா எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்

35. 10 லீட்டர் அல்லது அதற்கு கூடிய கொள்ளளவையுடைய தேங்காய் எண்ணெய் மற்றும் கறுவா எண்ணெய் புறநீங்கலாக தாவர அல்லது விலங்கு எண்ணெய்கள் மற்றும் கொழுப்புகள் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள் ;

36. உடன் தேநீர் அல்லது கோப்பி பதனிடும் தொழிற்சாலைகள் ;

37. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மதுசாரம் சேராத பானங்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

38. பத்து அல்லது அதற்குமேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்ட உலர் தேங்காய் ஆலைகள் அல்லது தேங்காய் பதனிடும் கைத்தொழில்கள்

39. நாளொன்றுக்கு 5000 கிலோகிராம் அல்லது அதற்கு அதிகமான உற்பத்தித் திறன் கொண்ட ஈரப்பதனிடுதல் முறைகளுடன் கூடிய அரிசி ஆலைகள் ;

40. இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட கோழிகளையுடைய எல்லா அடைக்காப்பு நிலையங்களும் அல்லது 50 க்கு மேற்பட்ட அல்லது 2500 அல்லது அதற்கு மேற்பட்ட கலவன் பண்ணைத் தொழிலுக்கான தரப்படுத்துதலையுடைய பன்றி, மாட்டு மற்றும் ஆட்டுப் பண்ணைகள் ;

*கலவன் பண்ணைக்கான தரப்படுத்துதல் = கோழிகளின் எண்ணிக்கை +50 X (பன்றிகளின் எண்ணிக்கை + மாடுகளின் எண்ணிக்கை + ஆடுகளின் எண்ணிக்கை)

41. ஒரு நாளைக்கு 25 மெற்றிக் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்திக் கொள்ளளவை கொண்டிருக்கும் விலங்குத் தீன் உற்பத்தித் தொழிற்சாலை ;

42. ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைக் கொண்ட சிகரட் அல்லது வேறு புகையிலை கைத்தொழில்கள் ;

43. உலோகத்தை அல்லது பிளாஸ்டிக்கை மேற்பரப்பு செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள் (தூள் முலாமிடும் கைத்தொழில்கள், மின்முலாமிடுதல், அனோட்டாக்கம், நாகம் பூசுதல் முதலியன ;

44. இரும்பு மற்றும் உருக்கு ஆலைகள் ;

45. எத்தன்மையதான உலையுடன் கூடிய வார்ப்புக் களரிகள் ;

46. இரண்டாந்தர பதனிடுதல் உருக்கு உலோகங்கள் மீட்டல் உட்பட இரும்பு சாரா உலோகம் பதனிடும் கைத்தொழில்கள் ;

47. இருபத்தைந்திற்குக் குறைந்த வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கடைசல் பட்டறைகள் காய்ச்சி பொருத்தும் வேலைத்தளங்கள் சிவிறி வர்ணந்தீட்டும் கைத்தொழில்கள் உட்பட்ட உலோக வடிவமைப்பு கைத்தொழிற்சாலைகள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், உபகரணங்கள் தயாரித்தல் அல்லது கனரகப் பொருட்கள், மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி செய்யும் அல்லது பொருத்தி உருவாக்கும் கைத்தொழில்கள் ;

48. சீமெந்து கைத்தொழில்கள் (கிளிங்கர் அரைத்தல், தயாரித்தல் அல்லது மீள்பொதியிடல்) ;

49. நாளொன்றிற்கு 50 கனமீற்றருக்கு அல்லது அதற்கு அதிகமாக கொள்ளளவு கொண்ட கொங்கிறீற்று தொகுதியிடும் பொறித்தொகுதிகள் ;

50. கண்ணாடிகள் அல்லது கண்ணாடிப்பொருள் தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

51. நாளொன்றுக்கு 20 மெற்றிக் அல்லது அதற்கு அதிகமான உற்பத்தித் திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள் ;

52. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்துக் கைத்தொழில்கள் ;

53. மாதத்திற்கு 600 கனமீற்றருக்கு அல்லது அதற்கு அதிகமான உற்பத்தி திறனுடன் கூடிய பல்துளை தகர்ப்பு அல்லது ஒற்றைத் துளைத் தகர்ப்புடைய இயந்திரமயமாக்கப்பட்ட சுரங்கத் தொழிற்பாடுகள் ;

54. ஓட்டுச் சுண்ணம் மற்றும் கருங்கல் உடைக்கும் செயற்பாடுகள் புறநீங்கலாக உலோகம் சாராத கனிப்பொருட்களை உடைத்தல் அல்லது பதனிடுதல் (உதாரணம் : சுண்ணக்கற்கள், தொலமைற்று, அப்பரைட், பாறைப் பொசுபேற்று, மண்கல், களிக்கல், படிகம், இல்மனைற்று, உரூற்றைல், சேர்கொன், மைக்கா, காரீயம், கயோலின் முதலியன) ;

55. கிரனைட் பாறைக்கற்கள் ஆக்குதல் அல்லது பதனிடுதற் கைத்தொழில்கள் ;

56. நாளொன்றுக்கு 25 கனமீற்றர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித் திறனையுடைய கிரானைட் நொறுக்குதல் (உடைகல் நொருக்குதல்) கைத்தொழில்கள் ;

57. பொதுக்கழிவுநீர் அல்லது அழுக்குப் பொருள் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள் ;

58. நாளொன்றிற்கு 5 மெற்றிக்தொன் அல்லது அதற்கு அதிகமான உள்ளீட்டு கொள்ளளவு உடைய எரிசூளை.

59. நாளொன்றிற்கு 10,000 கனமீற்றர் அல்லது அதற்கு அதிகமானகொள்ளளவுடைய நீர்ச் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள் ;

60. நாளொன்றுக்கு 10 மெற்றிக்தொன் அல்லது அதற்கு அதிகமான கொள்ளளவுடைய மாநகர திண்மக் கழிவையும் வேறு திண்மக் கழிவையும் சேதனப் பசளையாக்கும் பொறிகள் ;

61. நாளொன்றுக்கு 10 மெற்றிக்தொன் அல்லது அதற்கு அதிகமான கொள்ளளவைக் கொண்ட திண்மக் கழிவை மீளுருவாக்கம் மீள்பயன்பாடு செய்யும் அல்லது பதனிடும் பொறிகள் ;

62. நாளொன்றுக்கு 10 மெற்றிக்தொன் அல்லது அதற்கு அதிகமான கொள்ளளவைக் கொண்ட திண்மக் கழிவு கையுதிர்க்கும் அமைப்புகள் ;

63. நச்சுத்தன்மையான அல்லது தீங்கு விளைவிக்கும் எல்லாக் கழிவுகளையும் பதனிடும் அமைப்பு அல்லது கையுதிர்க்கும் அமைப்பு அல்லது மீள்பயன்பாடு செய்யும், மீளுருவாக்கம் செய்யும் அல்லது களஞ்சிய வசதிகள் ;

64. (போரோன் பதப்படுத்தல் தவிர) இரசாயனம் மற்றும் எண்ணெய்ப் பதனிடல் மற்றும் மரத்தைப் பேணிக்காத்தல் தொடர்பான கைத்தொழில்கள் ;

65. நாளொன்றுக்கு 50 கன மீற்றர் அல்லது அதற்கு அதிகமான ஆலைக் கொள்ளளவை உடைய மர ஆலைகள் ;

66. இருபது அல்லது அதற்கு அதிகமான அறைகளைக் கொண்ட ஹோட்டல்கள் , விருந்தினர் இல்லங்கள் மற்றும் வாடி வீடுகள் ;

67. இருநூறு பேர் அல்லது அதற்கு மேற்பட்டோர் இருப்பாட்சிகொள்ளும் வசதியுடைய ஹோட்டல்கள் மற்றும் இதனையொத்த வசிப்பிடங்கள் ;

68. எல்லா வைத்தியசாலைகளும் தனியார் சுகாதார பரிசோதனை கூடங்களும் ஆய்வுகூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் உட்பட தொற்றுக் கழிவுகளை உண்டுபண்ணும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் ;

69. தன்னியக்க ஊர்தி அல்லது துவிச்சக்கரவண்டி உற்பத்தி செய்யும் அல்லது பொருத்தி உருவாக்கும் கைத்தொழில்கள் ;

70. வாகனப் பராமரிப்பு நிலையங்கள் அல்லது கொள்கலன் சாலைகள் வாகனப் பராமரிப்பு நடவடிக்கைகள் கொண்ட (முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் பராமரிப்பு மற்றும் உள்ளகச் சுத்திகரிப்பு புறநீங்கலாக) ;

71. வாகனப் பராமரிப்பு செயற்பாடுகளையுடைய அனைத்து பஸ் சாலைகளும் அல்லது புகையிரத வேலைக்களங்களும் ;

72. எவையேனும் வாகனக்கழிவு வெளிப்பாடுகளின் சோதனை நிலையங்கள் ;

73. அவசரகால மின்பிறப்பாக்கிகள் அல்லது நீர்மின் அல்லது சூரிய அல்லது வளிச்சக்தி பிறப்பாக்கம் புறநீங்கலாக மின்சக்திப் பிறப்பாக்கிப் பயன்பாடுகள் ;

74. ஈயத்தை உருக்கி எழுத்து தயாரித்தலுடன் கூடிய அச்சகங்கள் அல்லது செய்முறைக் கழிவுநீரை உண்டுபண்ணும் அச்சுக் கைத்தொழில்கள் அல்லது வர்ணப்புகைப்படம் பதனீட்டும் நிலையங்கள் ;

75. கடதாசி அல்லது கடதாசிக் கூழ் கைத்தொழில்கள் அல்லது நெளிவு உறைகள் தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

76. முறைமாற்று அடிப்படையில் 200 வேலையாட்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் கைத்தொழில் ;

77. கட்டுநாயக்க ஏற்றுமதி முறைப்படுத்தல் வலயம், பியகம ஏற்றுமதி முறைப்படுத்தல் வலயம் என்பன உட்பட சூழல் சட்டத்தின் பாகம் VI இ என்பதன்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள கைத்தொழில்கள் ;

78. மிருகக் காட்சிச்சாலைகள் ;

79. தொலைத்தொடர்பு மற்றும் ஒலிபரப்புடன் சம்பந்தப்பட்ட தொடர்பாடல் கோபுரங்கள் ;

80. நாளொன்றுக்கு 10 கனமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட கழிவுநீரை வெளியேற்றும் அல்லது நச்சு இரசாயனப் பொருட்களை பதனிடுதலைப் பயன்படுத்தும் மேலே உள்ளடக்கப்படாத ஏதேனும் கைத்தொழில்.

## பகுதி "ஆ"

1. நாளொன்றுக்கு 1000 கிலோகிராமிற்குக் குறைவான உற்பத்தித் திறனுடைய சவர்க்காரம், அழுக்கு அகற்றிகள், மிருதுவாக்கிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்புப் பொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

2. பெற்றோல் நிரப்பு நிலையங்கள் அல்லது திரவாக்கப்பட்ட பெற்றோலிய வாயு (எல். பி. வாயு) களஞ்சியங்கள் அல்லது நிரப்பும் வசதிகள் புறநீங்கலாக, 150 மெற்றிக் தொன்னுக்கு குறைவான மொத்தக் கொள்ளளவு கொண்ட மொத்த திரவப் பெற்றோலியக் களஞ்சிய வசதிகள் ;

3. பத்துக்குக் குறைவான வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள கண்ணாடியிழையை ஒரு மூலப்பொருளாகப் பயன்படுத்துவதில் ஈடுபட்ட கைத்தொழில்கள் ;

4. நாளொன்றுக்கு 40 கிலோகிராமிற்கும் அதிகமானதும் நாளொன்றுக்கு 100 கிலோகிராமிற்கு குறைவானதுமான உற்பத்தித்திறனுடைய வரிவரியான புகையூட்டிய இறப்பர் ஷீட் தயாரித்தல் கைத்தொழில்கள் ;

5. ஏவப்பட்ட காபன் அல்லது காபன் கரி தயாரிக்கும் கைத்தொழில்கள் அல்லது தொகுதியொன்றுக்கு 10 மெற்றிக்தொன்னுக்குக் குறைவான மரக்கரியைத் தயாரிக்கும் உற்பத்தித்திறனுடைய மரக்கரி தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

6. பத்துக்கு மேற்பட்டதும் 25க்குக் குறைவானதுமான வேலையாட்களை வேலைக்கமர்த்தியுள்ள ஆயுள்வேத சுதேசிய மருந்து உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில், பிரித்தெடுப்பதில் அல்லது முறைவழிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள் ;

7. பத்துக்குக் குறைவான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள பத்திக் கைத்தொழில்கள் ;

8. பத்துக்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வர்த்தக சலவைக்கூடங்கள் அல்லது புடவை மணல் பீற்றுக் கைத்தொழில்கள் ;

9. உலர் பதனீட்டுத் தொழிற்பாடுகளைக் கொண்ட தோல் மெருகிடற் கைத்தொழில்கள் ;

10. இயற்கை நாரை வெளிறச் செய்வதில் அல்லது சாயமிடுவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள் புறநீங்கலாக 25க்குக் குறைவான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள இயற்கை நாரை மூலக்கூறாகக் கொண்ட கைத்தொழில்கள் ;

11. இருபத்தைந்திற்குக் குறைவான இயந்திரங்களைக் கொண்ட மின்தறி மற்றும் பின்னல் கைத்தொழில்கள் ;

12. பத்திற்கு மேற்பட்ட தறிகளைக் கொண்ட கைத்தறி நெசவு மற்றும் சித்திரத் தையல் தொழிற்சாலை ;

13. முறைமாற்று ஒன்றுக்கு 25க்கு மேற்பட்டவர்களுக்கும் 200இற்கு குறைந்தவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தைத்த ஆடைக் கைத்தொழில்கள்;

14. சீனித்தொழிற்சாலை அல்லது சீனிசுத்திகரிப்பு நிலையங்கள் தவிர்ந்த கரும்புக் கைத்தொழில்கள் ;

15. உணவு உற்பத்திகள் வெதுப்பக உற்பத்திகள் உட்பட 5 இற்கு அதிகமான 25 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கமர்த்தியுள்ள உணவு உற்பத்தி மற்றும் பதனீட்டுக் கைத்தொழில்கள் ;

16. நாளொன்றுக்கு 10 லீற்றருக்கு குறைவான உற்பத்தித் திறனுடைய கறுவா எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில் ;

17. நாளொன்று 50000 கிலோகிராமுக்குக் குறைவான உற்பத்தி திறன்கொண்ட ஈரப்பதனீட்டையுடைய அரிசி ஆலைகள் ;

18. மாதமொன்றுக்கு 1000 கிலோகிராமிற்கும் கூடுதலான உற்பத்தித் திறனுடைய அரைக்கும் ஆலைகள் ;

19. இருநூற்றிஐம்பதும் அதற்கு மேற்பட்டதும் 2500க்குக் குறைவானதுமான கோழிகளையுடைய கோழிப்பண்ணைகள் அல்லது 5 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50க்கும் குறைவானதுமான அல்லது 250க்கும் அதிகமானதும் 2500க்குக் குறைவானதுமான கலவன் பண்ணைக்குத் தொழிலுக்கான தரப்படுத்தலையுடைய பன்றி, மாட்டு மற்றும் ஆட்டுப் பண்ணைகள் ;

  * கலவன் பண்ணைக்கான தரப்படுத்துதல் = கோழிகளின் எண்ணிக்கை +50 X (பன்றிகளின் எண்ணிக்கை + மாடுகளின் எண்ணிக்கை + ஆடுகளின் எண்ணிக்கை)

20. நானொன்றுக்கு 25 மெற்றிக் தொண்ணுக்கும் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட விலங்குத் தீவனங்கள் உற்பத்தித் தொழிற்சாலைகள் ;

21. எல்லா விதமான பனிக்கட்டிக் கைத்தொழில்களும் ;

22. இருபத்தைந்திக்குக் குறைந்த வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கடைசல் பட்டறைகள் காய்ச்சிப் பொருத்தும் வேலைத்தளங்கள் சிவிறி வர்ணந்தீட்டும் கைத்தொழில்கள் உட்பட்ட உலோக வடிவமைப்பு கைத்தொழிற்சாலைகள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், உபகரணங்கள் தயாரித்தல் அல்லது கனரகப் பொருட்கள், மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி செய்யும் அல்லது பொருத்தி உருவாக்கும் கைத்தொழில்கள் ;

23. நாளொன்றுக்கு 50 கனமீற்றருக்கு அல்லது அதற்கு அதிகமான கொள்ளளவு கொண்ட கொங்கிறீற்று தொகுதியிடும் பொறித்தொகுதிகள்;

24. மாதமொன்றுக்கு 600 கன மீட்டருக்கும் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட வெடிமருந்துகளைப் பயன்படுத்தி கைத்தொழில் சுரங்கத்தொழிற்பாடுகளையுடைய ஒற்றைத் துளை தகர்ப்பு ;

25. கைக்கருவிகளைப் பயன்படுத்தி கையினால் நொறுக்கும் தொழிற்பாடுகள் புறநீங்கலாக நாளொன்றுக்கு 25 கனமீட்டருக்கும் குறைவான மொத்த உற்பத்தி ஆற்றல் கொண்ட கருங்கல் உடைக்கும் (உடைகல் உடைக்கும்) கைத்தொழில்கள் ;

26. நாளொன்றுக்கு 10 மெற்றிக் தொன்னுக்கும் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட மாநகர திண்மக் கழிவு மற்றும் வேறு திண்மக் கழிவு சேதனப் பசளை உற்பத்திப் பொறி ;

27. நாளொன்றுக்கு 10 மெற்றிக் தொண்ணுக்குக் குறைவான திண்மக் கழிவுகளை மீட்டெடுக்கும்/மீளபயன்பாடு செய்யும் அல்லது பதனிடும் பொறித்தொகுதிகள் ;

28. நாளொன்றுக்கு 10 மெற்றிக் தொண்ணுக்குக் குறைவாகக் கையுதிர்க்கும் திண்மக் கழிவு வெளியேற்றும் வசதி ;

29. இருபத்தைந்துக்கும் கூடுதலான தங்குநர்களினதும் 200க்கும் குறைவான தங்குநர்களினதும் இருப்பாட்சி மட்டத்தையுடைய ஹோட்டல்களும் அதனையொத்த தங்குமிடங்களும் ;

30. வர்ணம் சிவிறும் அல்லது வளிச்சீராக்கும் செயற்பாடுகள் உட்பட வாகனங்களைப் பழுதுபார்ப்பனவும் பராமரிப்பனவுமான கராஜ்கள் ;

31. வளிச்சீராக்கலில் அல்லது குளிரூட்டிகளிலிருந்து குளிரூட்டுப் பதார்த்தங்களை மீள் பயன்பாடு செய்யும் அல்லது மீட்டெடுக்கும் நிலையங்கள் ;

32. முச்சக்கர வண்டிகள் அல்லது மோட்டார் சைக்கிள்கள் பராமரிக்கும் செயற்பாடுகள் அல்லது வாகன உப்புற சுத்திகரிப்பு நடவடிக்கைகள் ;

33. மேலே உள்ளடக்கப்படாததும் நாளொன்றுக்கு 3 கனமீட்டர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 கனமீட்டருக்குக் குறைவானதுமான கைத்தொழில் பதனீட்டுக் கழிவுநீரை வெளியேற்றுவதுமான ஏதேனும் கைத்தொழில்.

### பாகம் இ

1. எல்லா வாகன எரிபொருள் நிரப்பும் நிலையங்களும் (திரவப் பெற்றோலியம் மற்றும் திரவ பெற்றோலிய வாயு உட்பட) ;

2. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மெழுகுவர்த்தி உற்பத்தி ;

3. பத்துக்கும் மேற்பட்டவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய்ப் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள் ;

4. பத்துக்குக் கூடுதலானவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மதுசாரமற்ற பானவகைகள் ;

5. உலர் பதனீட்டு முறைத் தொழிற்பாடுகளையுடைய அரிசி ஆலை ;

6. ஒரு மாதத்திற்கு 1000 கிலோகிராமிலும் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட அரைக்கும் ஆலைகள் ;

7. புகையிலைக் களஞ்சியங்கள் ;

8. தொகுதியொன்றுக்கு 500 கிலோகிராம் அல்லது அதற்குமேற்பட்ட கந்தகத்தூமமூட்டும் கொள்ளளவுடைய கறுவா தூமமூட்டும் கைத்தொழில்கள் ;

9. உணவிற்கு பயன்படுத்தப்படும் உப்பு சிப்பஞ்செய்தல், பதனிடுதல் கைத்தொழில்கள் ;

10. தேயிலைத் தொழிற்சாலைகள் ;

11. கொங்கிரீட் முன்வார்ப்புகள் கைத்தொழில்கள் ;

12. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக் குற்றி தயாரிக்கும் கைத்தொழில்கள் ;

13. நாளொன்றுக்கு 20 மெற்றிரிக்தொன்னுக்குக் குறைவான உற்பத்தித் திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள் ;

14. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்துக் கைத்தொழில்கள் ;

15. எல்லாவிதமான சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் கைத்தொழில்கள் ;

16. கூரை ஓடு மற்றும் செங்கல் சூளைகள் ;

17. வெடிமருந்துகளைப் பயன்படுத்தும் கம்மியர் சுரங்கத் தொழில் நடவடிக்கைகளுடனான ஒற்றைத் துளை தகர்ப்புகள் ;

18. நாளொன்றுக்கு 50 கன மீட்டருக்கும் குறைவான அரிக்கும் ஆற்றல் கொண்ட மர ஆலைகள் அல்லது மரத்தின் போரோன் செயற்படுத்தலில் அல்லது மரத்தை பருவப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள் ;

19. ஐந்துக்குக் கூடுதலான 25க்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பலநோக்குத் தச்சுப் பொறிகளைப் பயன்படுத்தும் தச்சு வேலைக்களங்கள் அல்லது மரத்தை மெருகூட்டும் கைத்தொழில்கள் அல்லது மரவேலைக்களங்கள் ;

20. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20க்குக் குறைவானதுமான அறைகளைக் கொண்ட வதிவிட வசதியுடைய ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், வாடிவீடுகள் ;

21. வாகனங்களைப் பழுது பார்க்கும் செயற்பாடுகள் அல்லது பராமரித்தல் செயற்பாடுகளையுடைய கராஜ்கள் ;

22. குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி உபகரணங்களும் முறைமைகளும் பழுதுபார்த்தல், பேணல், நிறுவுதல், இணைத்துப் பொருத்துதல் உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளும் வேலைக் களங்களும் பராமரிப்பு வசதிகளும் (கராஜ்கள் உட்பட) நடமாடும் வளிச்சீராக்கிகள், போக்குவரத்துக் குளிரேற்றிகள் மற்றும் குளிரேற்றல் மீட்பு மற்றும் மீள்பயன்பாடு போன்ற சார்புடைய செயற்பாடுகள் உட்பட ;

23. வாகனப் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள் ;

24. பத்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எல்லாவிதமான மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பழுதுபார்த்தல் ;

25. ஈயம் உருக்குதல் புறநீங்கலாக அச்சுக்கூடங்களும் எழுத்தச்சுப் பொறிகளும்.

சூழல் பாதுகாப்பு உரிமம் தேவைப்படுத்தப்பட்டவையும் 22.11.2000 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான செயற்பாடுகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

2- 288

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.